1210.2023 (பக்கம் 2)

எச்.எம்.ஓ.பி. 24/2017

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விவகாரத்து கோரி தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். 2015ம் ஆண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அவ்வழககில் என்னுடைய மனைவி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது Deputy Section officer **ஆக தலைமை செயலகத்தில் உள் துறையில் பணபி்ரிந்து வருகின்றேன் . 8 வருட காலமாக** பணிபுரிந்து வள்துள்ளேன். எனது மனைவி தலைமை செயலகத்தில் தான் பணிபுரிந்து வருகின்றார். 23.01.2013 அன்று எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்திற்கு முன்பு எனது மனைவி அரசு ஊழியராகத்தான் பணிபுரிந்து வந்தார். திருமணத்தின்போது எனது மனைவி தலைமை செயலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறையில் பணிபுரிந்து வந்தார். எங்களுக்கு ஒரு மகன் உள்ளார். அவனது பெயர் ஆதித்யா ஆகும். எனது மகன் தற்போது எனது மனைவியுடன் தான் வசித்து வருகின்றார். தரகர் மூலமாகத்தான் எதிர்மனுதாரரை நாங்கள் பெண் பார்த்தோம். நாங்கள் இருவரும் வேலைக்கு செல்லும்போது ஒன்றாக இரயிலில் தான் செல்வோம் என்றால் இல்லை.

( எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)